**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை திரு.C. உதயசுந்தரம்.,பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–2, ஆத்தூர்.**

2026ம் ஆண்டு ஜூலை திங்கள் 10ம் நாள் வெள்ளிக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.328/2021</u>**

**(CNR No) TNSA140021182021**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | அரசு சார்பாக – காவல் உதவி ஆய்வாளர்,<br>கருமந்துறை காவல் நிலையம்.<br>குற்ற எண்.36/2021 |
| // எதிர் // | | |
| எதிரிகள் | – | 1. வெங்கடேசன் (50/2021),<br>த/பெ. சடையன்.<br>2. லட்சுமணன் (41/2021),<br>த/பெ. சடையன்.<br>3. சடையன் (65/2021),<br>த/பெ. ராம கவுண்டர். |
| குற்றம் சாட்டப்பட்டது | – | எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 427, 506(1)–ன் படியும், |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | – | 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)–வின் படியும், 2ம் எதிரி லட்சமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) –வின் படியும், 3ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)–வின் படியும் |
| தீர்மானம் | – | இறுதியாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 427, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது என முடிவுசெய்து 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)–வின் படியும், 2ம் எதிரி லட்சமணன் மீது |

| | | |
|---|---|---|
| | | இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) – வின் படியும், 3ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)–வின் படியும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து எதிரிகளை 248 (1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| புகார் நாள் | – | 30.01.2021 |
| எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | – | A1– A3–10.02.2021 |
| பிணையில் சென்ற நாள் | – | A1–A3–12.02.2021 |
| கோப்பு நாள் | – | 23.12.2021 |
| விசாரணை தொடங்கப்பட்ட நாள் | – | 24.08.2023 |
| விசாரணை முடிக்கப்பட்ட நாள் | – | 14.07.2025 |
| தீர்ப்புரை நாள் | – | 10.07.2026 |

எதிரிகளின் மீதான இந்த வழக்கானது இந்நீதிமன்ற கோப்பிற்கு கடந்த 23.12.2021 ம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசுத்தரப்பில் அறிவார்ந்த அரசு குற்றத்துறை வழக்குரைஞர் நிலை– 2 அவர்களும், எதிரிகள் தரப்பில் அறிவார்ந்த வழக்குரைஞர் திருவாளர். D.ரெங்கசாமி அவர்கள் ஆஜராகி எடுத்துரைக்க இவ்வழக்கின் ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டும் இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

1) கடந்த 28.01.2021ந் தேதி மாலை 04.00 மணிக்கு கருமந்துறை காவல்

நிலைய சரகம், வாதி அவரது வீட்டு அருகில் மாட்டை கட்டி பால் கறந்து கொண்டிருக்கும் போது அந்த வழியாக 3 ம் எதிரி சடையனின் மகன்கள் 2ம் எதிரி லட்சுமணன் மற்றும் 1ம் எதிரி வெங்கடேசன் இருவரும் நடக்கிற தடத்துல எதுக்குடா மாட்டை கட்டி வச்சிருக்க ஏண்டா தேவடியா கண்டாரஓலி பையா என்று தகாத வார்த்தையால் திட்டினார் என்றும், மேலும் 2ம் எதிரி வாதி ஈஸ்வரனை காலால் எட்டி உதைத்தும் முதுகில் கையால் அடித்தும் சொற்பகாயத்தை எற்படுத்தினார் என்றும், மேலும் 1ம் எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியின் மீது இட்டதில் நெற்றியிலும் மேல் உதட்டிலும் கண்ணிய காயம் ஏற்படுத்தினார் என்றும், மேலும் 1ம் எதிரி அங்கு வந்த வாதியின் அண்ணன் லட்சுமணனை பார்த்து நீயும் வந்துட்டியாடா தேவடியா பயலே என்று கெட்டவார்த்தையால் திட்டிக்கொண்டே கையில் வைத்திருந்த தடியால் வாதியின் அண்ணனின் வலது பக்க காதில் அடித்து ரத்தக்காயமும் 2ம் எதிரி வாதியின் அண்ணனை கல்லால் அடித்ததில் தலையில் சிராய்ப்பு காயமும்எற்படுத்தினார் என்றும், மேலும் எதிரிகளிடமிருந்து தப்பிக்க வாதியும், வாதியின் அண்ணனும் அவர்களது அம்மா வீட்டிற்குள் நுழைத்து கதவை உள்பக்கமாக சாத்திக்கொண்டு இருந்தபோது மூன்று எதிரிளும் வீட்டின் முன்பு வந்து வெளிய வாங்கடா தேவடியா பசங்களா என்று கெட்ட வார்த்தையா'ல் திட்டி கீழே கிடந்த கட்டையை எடுத்து வீட்டின் முன்பு இருந்த சிமெண்ட் அட்டையை அடித்து மதிப்பு ரூபாய்.100/- சேதப்படுத்தினார்கள் என்றும், மேலும் எதிரிகள் மூவரும் வெளியே வாங்கடா உங்களை என்னைக்கா இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)-வின் படியும், 2ம் எதிரி லட்சமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) -வின் படியும், 3ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)-வின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கருமந்துறை காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது ஒரு குற்ற அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2) குற்ற இறுதி அறிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் சார்ந்திருக்கும் வழக்காவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் நகல்கள் கட்டணமின்றியும் காலதாமதமின்றியும் குவிமுச பிரிவு 207–ன்படி எதிரிகளுக்கு வழங்கப்பட்டது.

3) எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டது. எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவ எதிரிகள் தங்கள் மீதான இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 427, 506(2)–ன் படியான குற்றங்களை மறுத்தார்கள். வழக்காவணங்களை பரிசீலனை செய்த பின்பும் இருதரப்பு எடுத்துரைத்ததைக் கேட்டபின்பும் 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)–வின் படியும், 2ம் எதிரி லட்சமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) –வின் படியும், 3ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)–வின் படியும் குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் விளக்கிக் கூறி வினவ எதிரிகள் அக்குற்றச்சாட்டினையும் மறுத்தார்கள்.

4) எனவே அரசுத்தரப்பில் எதிரி மீதான வழக்கை நிருபிக்கும் விதமாக அ.த.சா.1 முதல் அ.த.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.த.சா.பொ.1 உடைந்த சிமெண்ட் அட்டை ஆகியவைகளும் குறியீடு செய்யப்பட்டது.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் பின்வருமாறு**

இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.த.சா.1 முதல் அ.த.சா.9 சாட்சிகளை விசாரணை செய்யப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் கொடுத்த அ.த.சா.1 ஈஸ்வரன் சம்பவத்தை பற்றியும், மற்றொரு காயம்பட்ட சாட்சியான அ.த.சா.2 லட்சுமணன் சம்பவத்தை பற்றியும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.3 கோவிந்தன், அ.த.சா.4 பாப்பாயி, அ.த.சா.5 வனிதா, அ.த.சா.6 பாஸ்கர் ஆகியோர்கள் சம்பவத்தை நேரில் பார்த்தது பற்றியும், மகஜர் சாட்சியான அ.த.சா.7 ரமேஷ் மகஜர்

சாட்சியாக இருந்து சாட்சி கையொப்பம் செய்தது பற்றியும், அ.த.சா.8 ராஜலட்சுமி வாதிக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று அளித்தது பற்றியும், அ.த.சா.9 கணேசன் புகாரை பெற்று வழக்கு பதிவுசெய்தது பற்றியும் இவ்வழக்கில் எதிரிகளை கைது செய்தும், புலன் விசாரணை மேற்கொண்டு 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)–வின் படியும், 2ம் எதிரி லட்சமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) –வின் படியும், 3ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)–வின் படியும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தது தொடர்பாகவும் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6) அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியப் பகுதிகளை குவிமுச 313 (1) (ஆ) –ன் கீழ் விளக்கிக் கூறி கேள்வி கேட்க எதிரிகள் தங்கள் மீதான சாட்சியத்தை மறுத்தார்கள். இது தங்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றும், தங்கள் தரப்பில் சாட்சிகள் உள்ளது என்றும் சொன்னார். ஆனால், எதிரிகள் தரப்பி்ல் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இத்துடன் இருதரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) **அரசுத்தரப்பு வாதம் பின்வருமாறு.**

அரசுதரப்பு வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் அ.த.சா.1 முதல் அ.த.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மற்றும் அ.த.சா.பொ.1 உடைந்த சிமெண்ட் அட்டை ஆகியவை குறியீடு செய்யப்பட்ட சாண்றாவணங்களிலிருந்தும் 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)–வின் படியும், 2ம் எதிரி லட்சமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) –வின் படியும், 3ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)–வின் படியும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது அதனால் அவர் தண்டிக்கத்தக்கப்படவேண்டியவர் என்று

வாதிட்டார்.

8) ஆனால், எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்றும், மேற்படி வழக்கின் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அரசுத்தரப்பு சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

9) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)–வின் படியும், 2 ம் எதிரி லட்சமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) –வின் படியும், 3 ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)–வின் படியும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

10) இவ்வழக்கின் புகார்தாரரான அ.த.சா.1 ஈஸ்வரன் அவரது சாட்சியத்தில் கடந்த 28.01.2021 ம் தேதி மாலை 04.00 மணியளவில் தான் தனது காட்டில் மாட்டிற்கு பால் கறந்து கொண்டிருந்தபோது எதிரி லட்சுமணன் வந்து சண்டை போட்டு தன்னை கல்லாலும், கட்டையாலும் அடித்துவிட்டார் என்றும், பின்னர் அங்கு வந்த எதிரிகள் வெங்கடேசன், சடையன் ஆகியோர்களும் சேர்ந்துகொண்டு தன்னை அடித்தார்கள் என்றும், தடுக்க வந்த தனது அண்ணன் லட்சுமணனையும் எதிரிகள் அடித்துவிட்டார்கள் என்றும், தாங்கள் வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டோம் என்றும், அப்போது எதிரிகள் கல்லைக்கொண்டு அடித்து வீட்டின் மேல்கூரை சிமெண்ட்சீட்டையும் உடைத்துவிட்டார்கள் என்றும்,து என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

11) மேலும் சம்பவத்தில் காயம்பட்ட மற்றொரு சாட்சியான அ.த.சா.2 லட்சுமணன் அவர்களது சாட்சியத்தில் கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பாக, தேதி, மாதம் ஞாபகம்

இல்லை என்றும், ஒருநாள் மாலை 04.00 மணியளவில் தான் கோவிலுக்கு சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்தபோது ஆஜர் எதிரிகள் வெங்டேசன், சடையன், லட்சுமணன் ஆகியோர்கள் தனது தம்பியை அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், நான் சென்றவுடன் என்னை பார்த்து தேவடியா பையலே நீயும் வந்துவிட்டாயா என்று சொல்லி என்னையும் அடித்தார்கள் என்றும், அதில் லட்சுமணன் கல்லால் தனது வலது பக்க காதின் அருகே அடித்துவிட்டார் என்றும், வெங்கடேஷ் கட்டையால் தனது பின்கழுத்தில் அடித்துவிட்டார் என்றும், தான் மயங்கி விழுந்துவிட்டேன் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

12) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.3 கோவிந்தன் அவர்களது சாட்சியத்தில் கடந்த 1 1/2 வருடங்களுக்கு முன்பாக, தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும், ஒருநாள் மாலை 04.00 மணியளவில் நான் வெளியே காட்டு வேலை சம்மந்தமாக சென்றுவிட்டு திரும்ப வீட்டிற்கு வந்தபோது ஆஜர் எதிரிகள் வெங்டேசன், சடையன், லட்சுமணன் ஆகியோர்கள் எனது மகன்களை அடித்துவிட்டதாக தன்னிடம் தனது மகன்கள் சொன்னார்கள் என்றும், தான் நடந்த சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்,

13) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த மற்றொரு சாட்சியான அ.த.சா.4 பாப்பாயி அவர்களது சாட்சியத்தில் கடந்த சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக தேதி, மாதம் நியாபகம் இல்லை என்றும், ஒருநாள் மாலை 04.00 மணியளவில் தனது மகன் ஈஸ்வரன் காட்டில் வேலை செய்துகொண்டிருந்தபோது, எதிரிகள் அங்கு வந்து உங்களுக்கு நிலம் இல்லை என்று சொல்லி தனது மகனை அடித்தார்கள் என்றும், தானும், தனது மகனுடன் காட்டில்தான் இருந்தேன் என்றும், சண்டையை விலக்க முடியவில்லை, அதனால் தனது மகனை வீட்டிற்குள் கூட்டிவந்துவிட்டேன் என்றும், எதிரிகள் தடி, கல் ஆகியவற்றை வைத்து தனது வீட்டினை அடித்து மேற்கூரையை பிரித்துவிட்டார்கள் என்றும், தனது மற்றொரு மகன் லட்சுமணன் கோவிலுக்கு சென்றுவிட்டு, திரும்ப வீட்டிற்கு வந்தபோது, எதிரி சடையன் அவரை அடித்து, அவரது

காதினை கிழித்துவிட்டார் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

14) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான அ.த.சா.5 வனிதா, அ.த.சா.6 பாஸ்கர் ஆகியோர்கள் அவர்களது சாட்சியத்தில் அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டுள்ளார்கள்.

15) மேலும் பார்வை மகஜர் சாட்சியான அ.த.சா.7 ரமேஷ் அவர்களது சாட்சியத்தில் கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் தேதி, மாதம் ஞாபகமில்லை. காலை நேரத்தில் தான் சின்னம்மாங்கோட்டில் உள்ள கோவிலுக்கு சென்றிருந்த போது அங்கே வந்த கருமந்துறை போலிசார் சண்டை நடந்தது சம்பந்தமாக விசாரித்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள் என்றும், நேரில் வந்த விசாரணை செய்ததற்கு சாட்சியாக தன்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்கள். மேலும் அ.த.சா.8 டாக்டர் ராஜலட்சுமி அவர்கள் அவர்களது சாட்சியத்தில் வாதிக்கு சிகிச்சை அளித்து காயச்சான்றிதழ் வழங்கியது பற்றியும் சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

16) மேலும் அ.த.சா.9 கணேசன் அவர்கள் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து மற்றும் வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.மோகன்ராஜ் ஆகியோர்களுடன் நான் பணி செய்து வந்துள்ளேன், அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம் ஆகும். மேலும் காவல் உதவி ஆய்வாளர் திரு.வீரமுத்து அவர்கள் இறந்ததாலும், வழக்கின் புலன்விசாரணை அதிகாரி ஓய்வுபெற்று பணியிடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும், வழக்கின் நலன் கருதி, ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். மேலும் கடந்த 30.01.2021ம் தேதி மதியம் 02.00 மணியளவில், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கோவிந்தராஜ் என்பவர் ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த புகார்தாரர் ஈஸ்வரன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை

பெற்று வந்து, பொறுப்பு காவல் உதவி ஆய்வாளராக திரு.வீரமுத்து அவர்கள் கருமந்துறை காவல் நிலைய பொறுப்பிலிருந்தவரிடம் ஒப்படைத்துள்ளார். திரு.வீரமுத்து அவர்கள் மேற்படி புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்ற எண்.36/2021 சட்ட பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 427, 506(2), 379 of IPC ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

17) மேலும் அ.த.சா.1 ஈஸ்வரன் அவர்களது குறுக்கு விசாரணையில் ஆஜர் எதிரிகள், எனது உடன் பங்காளிகள் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் எனக்கும், எனது அண்ணன் இருவருக்கும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது என்றும், எங்களைத் தவிர வேறு யாருக்கும் இவ்வழக்கில் காயம் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான்தான் புகார்தாரரும், பாதிக்கப்பட்டவரும் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் கடந்த 19.07.2022 தேதியில் அளித்துள்ள சாட்சியத்தில் எதிரிகள் என்னை அடித்ததாக தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், இந்நிலையில் எங்களுக்கிடையே சமதானம் ஏற்பட்டதால் இவ்வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சமரச மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் ஆமாம் என்றும், அந்த சமரச மனு அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் எங்களுக்கிடையே சமதானம் ஏற்பட்டதால் இவ்வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளதில் இருந்து அ.த.சா.1–ம், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

18) மேலும் காயம்பட்ட சாட்சியான அ.த.சா.2 லட்சுமணன் அவர்களது குறுக்கு விசாரணையில் ஆஜர் எதிரிகள், எனது உடன் பங்காளிகள் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் எனக்கும், எனது தம்பி ஈஸ்வரனுக்கும் தலையில் காயம் ஏற்பட்டிருந்தது

என்றும், எங்களைத் தவிர வேறு யாருக்கும் இவ்வழக்கில் காயம் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் கடந்த 10.07.2026 தேதியில் அளித்துள்ள சாட்சியத்தில் எதிரிகள் என்னை அடித்ததாக தெளிவுபட சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள சமரச மனுவில் நான் கையெழுத்து செய்துள்ளேனா என்றால் ஆமாம் என்றும்சொல்லி சாட்சியம் அளித்துள்ளார்.

19) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.த.சா.3 கோவிந்தன் அவரது குறுக்கு விசாரணையில் ஆஜர் எதிரிகள், எனது உறவினர்கள் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கின் அ.சா.1, 2 ஆகியோர்கள், எனது மகன்கள் என்றால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நான் கடந்த 24.08.2023 ம் தேதியில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான் என்றும், இந்நிலையில் எங்களுக்கிடையே சமதானம் ஏற்பட்டதால் இவ்வழக்கில் மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாம் என்று சொன்னால் சரிதான் என்றும், இவ்வழக்கில் நாங்களும், எதிரிகளும் சமரசமாக சென்றுவிட்டோமா என்றால் ஆமாம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20) மேலும் வழக்கின் விசாரணை குறித்து அரசு தரப்பில் சாட்சியம் அளித்த அ.த.சா.1 முதல் அ.த.சா.3 வரையிலானவர்களும், எதிரிளும் சமரசமாக செல்லவதாக இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும், இந்நிலையில் அ.த.சா.1 ஈஸ்வரன் அவர்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே குடும்ப பிரச்சனை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்பதும், மேற்படி சம்பவம் தொடர்பாக எதிரிகளுக்கும் அ.த.சா.1–ற்கும் முன்விரோதம் இருந்து வருகிறது என்பதும் மேலும், அ.த.சா.1–ம், எதிரிகளும் சேர்ந்து இந்நீதிமன்றத்தில் சமரச மனு தாக்கல் செய்துள்ளதிலிருந்து இவ்வழக்கில் மேல்நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்று

அ.த.சா.1 கருதுவதை இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. மேலும் மேற்படி காரணங்களால் அ.த.சா.1 சாட்சியம் அளித்துள்ளபடி இவ்வழக்கு சம்பவம் நடைபெற்றதாக என்பதிலேயேயும், அ.த.சா.1 புகார் வாக்குமூலத்திலும், தனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இருப்பதை பார்க்கும்போது சம்பவம் நடைபெற்றதா என்பதிலேயே இந்நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுகிறது.

21) மேற்படி அ.த.சா.1 தன் புகார் வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், இரு தரப்பினர்களும் சமதானமாக சென்றுவிட்டதாலும், மேல்நடவடிக்கை எதுவும் எடுக்க வேண்டாம் என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும் அ.த.சா.1–ம் மற்றும் எதிரிகளும் நெருங்கிய உறவினர்கள் என்பதாலும், மேற்படி நபர்களின் உறவு முறையை கருத்திற்கொண்டும், மேலும் அரசு தரப்பில் அளித்துள்ள சாட்சியம் எதிரிகள் மீதான குற்றத்தை நிரூபிக்க பயன்படுவதாக இல்லையென இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

22) மேலும் அ.த.சா.1 முதல் அ.த.சா.8 வரையிலான சாட்சிகள் புகார் வாக்குமூலத்திற்கும், அரசுதரப்பு குற்றச்சாட்டிற்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கும்போது இவர்களது சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவுவதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

23) இந்நிலையில் வழக்கின் விசாரணை குறித்து அரசு தரப்பில் சாட்சியம் அளித்த அ.த.சா.9 கணேசன் அவர்களின் சாட்சியத்தை மட்டும் நம்பி அரசு தரப்பு வழக்கு ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக எவ்வகையிலும் முடிவிற்கு வர இயலாது.

24) ஆகவே, மேற்படி சாட்சியங்களின் சாட்சியங்களை ஆராயும்போது அரசு தரப்பு வழக்கை நிருபிக்கும் வகையில் எந்த ஒரு சாட்சிகளும் சாட்சியம் அளிக்காததால்,

எதிரிகள் மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குகிறது.

25) இறுதியாக, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 294(பி), 323, 324, 427, 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு எதுவும் இந்நீதிமன்றத்தில் சந்தேகத்திற்கு இடமின்றி அரசுத் தரப்பில் நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிப்பது என முடிவுசெய்து 1 எதிரி வெங்கடேசன் மீது இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(1)–வின் படியும், 2ம் எதிரி லட்சமணன் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 427 506(1) –வின் படியும், 3ம் எதிரி சடையன் மீது இதச பிரிவுகள் 294(பி), 427, 506(1)–வின் படியும் அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டின் கீழ் அவர்கள் குற்றவாளிகள் இல்லையென தீர்மானித்து எதிரிகளை 248 (1) Cr.P.C–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

26) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சி.பி.எண்.242/2021ல் உள்ள சுமார் 1/2 KG எடையுள்ள உடைந்த சிமெண்ட் அட்டை வழக்கு சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள வழக்கு சொத்தினை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மேல்முறையீடு ஏதேனும் இருப்பின் அதன் உத்தரவிற்கேற்ப நடைமுறைப்படுத்தவும் இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**<u>Particulars under rule 106 of Criminal Rules of Practice 2019.</u>**

| Sl.No | Case No: | : | **CC No.328/2021** | |
|---|---|---|---|---|
| 2. | Name of the Police Station and Crime Number of the offence | : | Karumandurai P.S<br>Cr.No :36/2021<br>Offence : 294(b), 323, 324, 427, 506(2) IPC | |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | Name | : | A1- Venkatesan, A2- Lakkshmanan, A3-Sadaiyan | Description of the Accused |
| 4. | Father's Name | : | A1- Sadaiyan, A2-Sadaiyan, A3-Rama Gounder | |
| 5. | Occupation | : | A1- A3 - Farmer | |
| 6. | Residence | : | A1- A3, Chinnamankodu, Karumandurai, Pethanaiyakenpalaiyam, Salem Dt. | |
| 7. | Age | : | A1- 50, A2-41, A3-65 | |
| 8. | Occurrence | : | 28.01.2021 | Date of |
| 9. | Complaint | : | 30.01.2021 | |
| 10. | Apprehension or Appearance | : | A1- A3-10.02.2021 | |
| 11. | Release on bail | : | A1-A3-12.02.2021 | |
| 12. | Commitment | : | --- | |
| 13. | Commencement of trial | : | 24.08.2023 | |
| 14. | Closure of trial | : | 14.07.2025 | |
| 15. | Sentence or order | : | 10.07.2026 | |
| 16. | Service of copy of judgment or finding on accused | : | Acquittal | |
| 17. | Explanation of delay | | --- | |

**CASE SUMMERY AS PER THE CIRCULAR OF HON'BLE HIGH COURT, MADRAS IN R.O.C. NO. 814/2020/RG/F1, DT. 07.04.2021**

| | | | |
|---|---|---|---|
| i | the period of remand of the accused | : | A1-A3-12.02.2021 |
| ii | the date of filing of the complaint /final report in the Court | : | 03.05.2021 |
| iii | the date of committal of the case to the Court of Session | : | --- |
| iv | the date of questioning of the accused under section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | : | 09.03.2022 |
| v | filing of all miscellaneous petitions and their results including the results on | : | Nil |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | challenge before superior courts; except routine petitions like petitions under section 317 of the Code; | | | | |
| vi | date of examination in-chief and cross-examination of witness | : | P.W1 | 24.08.2023 | 24.08.2023 |
| | | | P.W2 | 24.08.2023 | 24.08.2023 |
| | | | P.W3 | 24.08.2023 | 24.08.2023 |
| | | | P.W4 | 08.09.2023 | 08.09.2023 |
| | | | P.W5 | 08.09.2023 | 08.09.2023 |
| | | | P.W6 | 08.09.2023 | 08.09.2023 |
| | | | P.W7 | 08.03.2024 | 08.03.2024 |
| | | | P.W8 | 14.07.2025 | 14.07.2025 |
| | | | P.W9 | 14.07.2025 | 14.07.2025 |
| vii | date of examination of the accused under section 313 of the Code | : | 25.07.2025 | | |
| viii | details of abscondence of an accused and his appearance / production, as the case may be | : | --- | | |
| ix | grant of stay by superior courts and the result thereof. | : | Nil | | |

27) மேற்படி தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினி மூலம் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 10 ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.10 00:21:06 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்தூர்.

**<u>பின்இணைப்பு:</u>**

**<u>1. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:–</u>**

| | |
|---|---|
| அ.த.சா.1 | ஈஸ்வரன் |
| அ.த.சா.2 | லட்சுமணன் |

| | |
|---|---|
| அ.த.சா.3 | கோவிந்தன் |
| அ.த.சா.4 | பாப்பாயி |
| அ.த.சா.5 | வனிதா |
| அ.த.சா.6 | பாஸ்கர் |
| அ.த.சா.7 | ரமேஷ் |
| அ.த.சா.8 | ராஜலட்சுமி |
| அ.த.சா.9 | கணேசன் |

**2. அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் :–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2–வது கையெழுத்து |
| அ.த.சா.ஆ.4 | லட்சுமணனின் விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.5 | ஈஸ்வரனின் விபத்து பதிவேட்டுடன் இணைந்த காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.7 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.8 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.9 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.த.சா.ஆ.10 | படிவம் –95 |
| அ.த.சா.ஆ.11 | எதிரிகள் நீக்கல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.12 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.13 | சமரச மனு |

3. <u>அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்கள்:</u> –

| | |
|---|---|
| அ.த.சா.பொ.1. | சிமெண்ட் அட்டை |

<u>4. எதிரிகள் தரப்பில் சாட்சிகள், ஆவணங்கள் சான்றுபொருட்கள்:</u>–

---இல்லை---

<u>குறிப்பு:</u>

1. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் அழைக்கப்படவில்லை.

2. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையிலிருந்தார்கள்.

3. வழக்கின் முடிவு பற்றிய விவரம் காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.07.10 00:21:14 +0530

நீதித்துறை நடுவர் எண் 2,
ஆத்துார்

Note: CSI order Uploaded date in 10.07.2026